வழங்கப்படாமல் இருக்கிறது. இந்த பாக்கியை பள்ளிக்கல்வி இயக்குநர் வழங்கவேண்டுமா, அரிசன நலத்துறை இயக்குநர் வழங்க வேண்டுமா என்ற பிரச்னை இருக்கிறது. ஆகவே, இது குறித்து அரசு இறுதி முடிவு சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்து பள்ளிக் கலவி இயக்குநா தெரிவித்த முடிவுப்படி, இப்போது மாவட்ட கல்வி அலுவலர் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்.

அரிசனநல சங்கம் என்ற பெயரால் வசூலிக்கப்பட்ட தொகை

*வினா எண் 389 திரு. கு. ரமணி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகர எல்லையில் உள்ள வாலாங்குளம் பகுதியில் அரிசனநல சங்கம் என்ற பெயரால் சிங்காநல்லூர் நகரமன்ற மாஜி உறுப்பினர் ஒருவர் ரூ. 12,000 வரை வசூலித்து அரிசனங்களை ஏமாற்றியுள்ளது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விபரங்கள் என்ன?

(இ) அரிசனங்களின் உரிமைகளை பாதுகாக்க என்ன செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) சிங்கா நல்லூர் நகராட்சியின் முன்னாள் உறுப்பினர் திரு. முனியப்பன், புலியகுளம் கிராமம் (வாலாங்குளம் பகுதி) பொது மக்களிடமிருந்து வீட்டு மனை நிலப்பட்டா பெற்றுத் தருவதாக வாக்களித்து ஒவ்வொருவரிடமும் ரூ. 200 வீதம் ரூ. 12,000 வசூலித்ததாக தெரிய வந்துள்ளது என்று கோயம் புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஆ) இது குறித்து புலன் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

(இ) அந்தப் பகுதியில் அரிசன மக்கள் இது போன்றவர் களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி மாவட்ட ஆட்சியாளர் அறிவுறுத்தியுள்ளார்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களும், அரிசன மக்களும் குடியிருக்க இடம் இல்லாமல் இருப் பதால், இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பல முறை விண்ணப்பங்கள் போட்டும், அது மறுக்கப்படுவதால், இந்த மாதிரி சூழ்நிலை ஏற்பட்டு வருவதை அரசு கவனத்தில் எடுத்துக்

1979 மார்ச் 14]

கொள்ளுமா? இப்படி விரும்பத்தகாத பேர்வழிகள் அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் சரி, அரிசனங்களை ஏமாற்றி பணம் பறிக்கும் வழிகளை மேற்கொண்டு வருவதால், இது தொடராமல் இருப்பதற்கு காவல் துறையிலும், மற்றும் ரெவின்யூ இலாகாவிலும், அதிலும் குறிப்பாக தாசில்தார் வகையறா அலுவலர்களைக் கொண்டு அதைக் கண்காணிக்க தொடர்ந்து ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் விவரம் தெரியாதவர்கள் என்கிற காரணத்தால்தான் இது போன்ற சமூக விரோதிகள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள். வீட்டு மனை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்படிப்பட்ட கையாடல் பேர்வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகவே இந்த முனியப்பனையும் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தான் கைது செய்து, தற்போது நீதிமன்றத்தால் ஜாமீனில் விடப்பட்டு இருக்கிறார். அந்தப் பகுதி மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம்

*வினா எண் 390—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு அரிசன நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் நிரந்தரமான அமைப்பா அல்லது தற்காலிகமானதா?

(ஆ) தற்காலிகமானதாயிருப்பின் எப்போது நிரந்தரம் ஆக்கப்படும்?

(இ) அதில் நியமிக்கப்பட்டிருக்கும் பணியாளர்கள் யாவரும் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டார்களா?

(ஈ) இல்லை என்றால், எப்போது நிரந்தரமாக்கப் படுவார்கள்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் தற்காலிகமான அமைப்பு.

(ஆ) அதை நிரந்தரமாக்கப்படுவதைப்பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.